தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 2 | தி.பி. 2014 சிலை-24 (8-1-1984) விலை 0-65 காசு இதழ் எண் : 30 பகுதி 2-3

தமிழ்நாட்டையே வடவர்க்குக் குத்தகை விட்டு விட்டதா-தமிழக அரசு?

கீழ்மேட்டூர் நீர் மின்திட்ட அணை வேலையை வேண்டுமென்றே வட நாட்டினர்க்குக் கையளித்துள்ளது அரசு!

தமிழகப் பொறியாளர்கள் எத்துணைத் திறமையாளர்கள்! அப்படியிருந்தும் திறமைக் குறைவான வடநாட்டுப் பொறியாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்!

1000-இல் 995 பேர் வடநாட்டினர் அல்லதுபிற மாநிலத்தவர்!

தமிழ்நாட்டிலேயே பிற மாநிலத்தவரால், தமிழர் அடிபட்டுச் சாகும் கொடுமை!

அனைத்துக் கட்சிகளும் கைவிட்ட நிலையில் பெரியார் மாவட்ட உ.த.மு.க. அடிபட்டவர்களுக்காகப் போராட்டம் நடத்தி வருகிறது!

பெரியார் மாவட்ட உ.த.மு.க. போராட்டக்குழு விடுக்கும் கோரிக்கைகள்!

அரசு உடனே தலையிட்டு ஆவன செய்க!

நம் தமிழ்நாட்டு முதலமைச்சர் ம.கோ. இராவின் தலைமையில் இயங்கி வரும் தமிழ்நாட்டு அரசு, ஒருபக்கம் பிற அரசுகளைப் போல இல்லாமல் ஆளுங் கட்சிக் காரர்களும், பிறமேட்டுக் குடியினருமே அரசின் வருமானத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் இருந்து, சிறிது மாறுபட்டுச் சாரவுணவு என்ற பேராலும், பல்பொடி வழங்கும் திட்டத்தாலும், ஏதோ ஓரளவு அரசுப் பணத்தை ஏழை எளிய மக்களுக்கும் பங்கிட்டுவருகிறது. இது ஒருவகையில் அவர்களுக்கு, அடுத்தும் ஆட்சியைப் பிடிப்பதற்குவேண்டிய வலுவை அளித்து வருகின்றது என்றுகூடச் சொல்லலாம்;

ஆனால் மறுபக்கத்திலே, தமிழ் நாட்டையே வடவர்களுக்கும், பிறமாநிலத்துக்காரர்களுக்கும் குத்தகை பேசி விட்டதைப் போல, தமிழ் நாட்டுக்கே ஓர் உள்ளரிப்பை உருவாக்கி வருகிறது.

எடுத்துக்காட்டாக தி.மு.க ஆட்சிக் காலத்திலே பெரியார் பிறந்த மண்ணில் மூன்றே மூன்று வடநாட்டுக்காரர்கள் தாம் கடைவைத்திருந்தார்கள். ஆனால், இன்று அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில், ஏறத்தாழ ஈரோட்டில் முக்கால் பாகம் அந்த வடநாட்டினருக்குக் கைமாற்றப்பட்டுள்ளது. ஆளும் கட்சியினரோ, எதிர்க்கட்சியினரோ, தம்முடைய வருமானம் குறையாமல் இருந்தால் சரி என்கின்றஅளவுக்குக் கொள்கையை விற்று விட்டனர்.

இந்த வகையில் தெளிவாகத் தெரியும் எடுத்துக்காட்டை இங்குக் குறிப்பிட விரும்புகிறோம். தமிழ்நாட்டு மின்சார வாரியம் கீழ் மேட்டூர் நீர் மின் திட்டத்தில் நான்கு அணைகளைக் கட்டும் பொறுப்பை, எச்.சி.சி (H.C.C) என்ற வட நாட்டுக் குழுமத்திடம் ஒப்படைத்தது. உண்மையில் அந்த வடநாட்டுக் குழுவைக் காட்டிலும் ஏறத்தாழ 40 இலக்க உருபாய்களைக் குறைத்தே கட்டித்தர முன்வந்த தமிழ்நாட்டுக்காரருக்கு ஏனோ வேலை மறுக்கப்பட்டது. காரணம் கட்டும் காலம் ஓராண்டு அதிகம் கோரியதுதானாம்! ஆனால், அப்படி வேலையைப் பெற்ற எச்.சி.சி குறித்த இரண்டாண்டுக் காலத்தில வேலையை முடித்ததா என்றால், அதுதான் இல்லை! அவர்கள் நோக்கமெல்லாம் இந்த வேலை நடந்து கொண்டிருக்கும் போதே வரக்கூடிய வேறு வேலைகளையும் எப்படிக் கைப்பற்றுவது என்பதே! அதனால், கிடைத்த பொன்னான காலத்தையும், சீர்கெட்ட ஆளுமைக் (நிர்வாகக்) குறைபாடுகளையும் பயன்படுத்தித் தமிழ்நாட்டு மின்சார வாரியத்தின் வருமானத்தில் மண்ணையே போட்டனர்.

வேலை கிடைத்த பின், முன்பு கோரிய தொகையைப் போல இரண்டு மடங்குத் தொகையை, அஃதாவது 10 கோடி என்றால் 20 கோடி பெறுவதற்கான சூழ்ச்சிகளை வகுத்துச் செயல்புரிகின்றனர். தமிழ்நாட்டு மின்சார வாரியமோ எண்கால் உயிரியிடம் அகப்பட்ட புழுவைப் போல, பணத்தை அவர்களுக்கு வாரி இறைக்கக் காத்துக் கொண்டிருக்கின்றது.

கீழ்மேட்டூர் நீர் மின் திட்டத்தில் மட்டும் அந்த எச்.சி.சி குழுமத்தில் ஏறத்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

தமிழீழம் பற்றிப்...

பிறர் என்ன சொல்கிறார்கள் ?

(கட்டுரைகள் தூய தமிழ்ப்படுத்தம் பட்டுள்ளன.)

செயவர்த்தனாவும்! தமிழர் விடுதலை முன்னணியும்

சென்ற மாத இறுதியில் புதுதில்லியில் நடைபெற்ற 'காமன்வெல்த்' நாடுகளின் மாநாடுகளை ஒட்டிப் புது தில்லிக்கு வந்தார் செயவர்த்தனா.

செயவர்த்தனா இந்தியத் தலைமையமைச்சருடனும் சி. பார்த்தசாரதியுடனும் நடத்திய பேச்சுகளையும்; தமிழர் ஒன்றிய விடுதலை முன்னணித் தலைவர்கள் சி. பார்த்தசாரதியுடனும், தலைமையமைச்சருடனும் நடத்திய பேச்சுகளையும்; இக்காலத்தில் இங்கே இலங்கைத்தமிழ் அமைச்சர் எசு.தொண்டைமான் இருதரப்பாரிடமும் பேசியவற்றையும் கொண்டு நாம் அறிவது என்ன?

1. தமிழர் ஒன்றிய முன்னணித் தலைவர்கள் 1977 தேர்தலின்போது முன்வைத்த தமிழ் ஈழவிடுதலை என்கிற" ஈழத் தமிழ்நாடு பிரிவினைக் கோரிக்கையை விட்டுவிட முன்வருகின்றனர்.

2. ஈழத் தமிழர்கள், இலங்கை இந்தியத் தமிழர்கள் அனைவர்க்கும் ஒரே தேசத்தை இலங்கை அரசின் கீழே பெற்று வாழத் தங்கள் கட்சி ஒப்பினால் அதை ஏற்க அணியாக இருக்கின்றனர்: இலங்கையில் வாழும் இந்திய முசுலிம்களும் இவர்களுடன் இணைந்து கொள்வதை வரவேற்கின்றனர்.

ஆனால் இந்தியாவில் உள்ள ஒரு மாநிலம் பெற்றுள்ள அளவிலாவது காவல்துறை, மற்ற ஆளுமைத் துறை அதிகாரங்கள் வேண்டும் எனக் கருதுகின்றனர்

3. செயவர்த்தனா மேற்கண்ட செய்திகளில் ஒரே தேசக் 'கவுன்சில்' என்பதை ஏற்கவில்லை; தொண்டைமானும் இதற்கு ஆதரவு தரவில்லை.

4. இன்று இலங்கையில் வாழும் 11 இலக்கம் மலையகத் தமிழர்களில் எவ்வளவு பேரை இந்தியா அழைத்துக் கொள்ள முடியும் என்பதில் இலங்கை அரசுக்கும் தெளிவு இல்லை; இந்திய அரசுக்கும் உறுதி இல்லை; தொண்டைமானுக்கும் உறுதி இல்லை.

இந்த நிலையில் செயவர்த்தனா கூட்ட இருக்கும் இலங்கை அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் என்பதில் தமிழருக்குத் தனியான ஒரு தேசக் 'கவுன்சில்' அல்லது இரு தேசக் 'கவுன்சில்'கள் என்பதில் எதை முன் வைத்து ஆராயும் என்பதும் தெரிவிக்கப்படவில்லை.

மேலே கண்ட நிலைமைகளைக் கொண்டு நமக்குப் புரிவது என்ன?

1. தமிழர் ஒன்றிய முன்னணித் தலைவர்கள் இங்குள்ள தி.மு.க., அ.தி.மு.க.வினரைப் போன்றே தமிழ்—தமிழர் என்கிற உணர்ச்சிப் போர்வையில் என்றும்போல் பதவி—மதிப்பு—பணம் இவற்றைக் காப்பாற்றிக் கொள்வதிலும் நலம்பெறுவதிலுந் தாம் முனைப்பாக இருக்கின்றனர்.

2. மலையகத் தமிழர்களின் எந்த உரிமைக்கும் உறுதி தர இலங்கை அரசு முன்வராது; தொண்டைமானும் முன்வரவில்லை.

3. இந்திய அரசு இலங்கையில் எது நடந்தாலும் அ'து அந்நாட்டின் உள்நாட்டுச் சிக்கல் என்றே கூறி, இலங்கைச் சிங்கள வல்லாளுமை குலையாமல் பார்த்துக் கொள்ள என்றும் உறுதியாக நிற்க இருக்கிறது.

இதன் விளைவாக ஈழச் சிக்கலும், மலையகத் தமிழர் சிக்கலும் என்றுமே தீர்க்கப்படமாட்டா என்பதும்; மேலே சொன்ன எந்தத் தரப்பாரும் இம் மக்கள் சிக்கல்களுக்குத் தீர்வுகாண விரும்பவில்லை என்பதும்; தங்கள் தங்கள் சொந்தச் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளவே இவர்கள் விரும்புகின்றனர் என்பதும் மிகத் தெளிவாகும்.

இனி ஈழம், படையினரின் வேட்டைக் காடாக மாறும்; மலையகத் தமிழர்கள் பல்லாயிரக்கணக்கில் கொல்லப்படுவார்கள்,—பல இலக்கக் கணக்கில் ஏதுமற்றவர்களாக இந்தியாவுக்குத் துரத்தப்படுவார்கள். இந்த அஞ்சத்தக்க நிலையை நாம் அனைவரும் எதிர்நோக்கி நிற்கிறோம் என்பதே இவற்றிலிருந்து புலனாகும் உண்மை.

இந்த நிலையில் தமிழீழ விடுதலை அணிகளை ஒருங்கே இணைப்பதும், அவர்களின் விடுதலைப் போருக்குப் பயனுள்ள அனைத்து ஆதரவுகளையும் அனைவரும் அளிப்பதும், நீண்ட நெடிய போராட்டத்துக்கு அவர்களும் மற்றும் விடுதலை விரும்பிகளும் அணியம் ஆவதுமே தீர்வு ஆகும்.

இலங்கை இனவெறி அரசோ, இந்திய அரசோ இந்த இரண்டு அரசுகளின் பேச்சுரைகள் மூலமே ஈழமலையகத் தமிழரின் சிக்கல்களைத் தீர்க்க முடியும் என நம்புகிற இலங்கைத் தமிழ்த் தலைவர்களோ அல்லது இந்தியத் தமிழ்த் தலைவர்களோ இனிமேல், ஈழமலையகத் தமிழர்களின் எதிரிகளே ஆவர்.

பேச்சுரைகளில் இவர்கள் காலந்தாழ்த்துவது சிக்கல்களைக் குழப்புவதற்கு மட்டுமே பயன்படும்; இலங்கை அரசு தமிழரை நசுக்கிட எல்லா ஏற்பாடுகளையும் வலிவாகச் செய்து கொண்டு மிக விரைவில் தமிழரைக் கொன்று குவிக்கவே வழிவகுக்கும்.

இந்திய அரசு இலங்கைப் படைக்கு வலிவூட்ட இங்கேயே சிங்களப் படைகளுக்குப் பயிற்சி அளிக்க முன்வந்தாலும் நாம் வியப்பு அடைய வழி இல்லை!

தமிழரின் இழிநிலை இங்கும் அப்படி; இலங்கையிலும் அப்படி; எங்குமே அப்படி.

— ஆசிரியவுரை, 'சிந்தனையாளன்'
10-12-83

இலங்கைத் தமிழர் சிக்கலுக்குத் தீர்வு ஈழமே !

இலங்கையில் இனப்படுகொலை நடந்து மாதங்கள் பல முடிந்து விட்டன. இதற்கிடையில் அமெரிக்கத் தூதுவர்கள், சீனத் தூதுவர்கள், இன்னும் பலவெளிநாட்டுத் தலைவர்களையும் சே ஆரும் அவர்தம் துணைவர்களும் சந்தித்து விட்டனர். தொடக்கத்தில் இந்தியாவின் நல்லெண்ணத்தூதுவர்களையே தேவையில்லை என ஒதுக்கித் தள்ளிய சே. ஆர். சயவர்த்தனா இன்று அவர்களையும் வரவேற்று ஏதோ ஓர் உடன்படிக்கைக்கு வர முயற்சி செய்வதாகத் தோன்றுகிறது.

தொடக்கத்தில் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் வெயின்பேகரையும் அவர் தம்துணைவர்களையும் சந்தித்து 90 நிமையம் பேசிய செயவர்த்தனே, பின்னர் சீனத்தின் முகாமைத் தூதுவர்களையும் சந்தித்துப் பேசியுள்ளார். இவர்கள் எல்லோரும் ஈழ விடுதலைக் கெதிராக சே. ஆர். விற்கு உதவி செய்ய உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகின்றது. இறுதியாக இந்திய நல்லெண்ணத் தூதுவர் பார்த்தசாரதி இலங்கையில் நிற்கும்போதே மீண்டும் அமெரிக்காவின், வெளிநாட்டுக் கொள்கைக்கு பொறுப்பான ஒருவரையும் கண்டு பேசியுள்ளார். ஒன்றியத் தேசியகட்சி அரசின் பாராளுமன்றக் கூட்டத்திலும் இந்த அமெரிக்க முகாமையரைக் கலந்துகொண்டுள்ளார். 9-11-83-இல் நடந்த இப் பாராளுமன்றக் கூட்டத்தில் சிறிலங்கா எச் சமயத்திலும் திருகோணமலையை விட்டுக்கொடுக்கக் கூடாதென்றும், அது தொடர்ந்து சே. ஆர். அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்க வேண்டுமென்றும், இவர் அறிவுரை கூறியுள்ளார். அத்துடன் இலங்கைப் படைத்துறைக்குத் தம்மாலான முழு உதவியையும் செய்வதாக உறுதியளித்த இந்த அமெரிக்கக் கனவான் ஈழப்போராளிகளைச் சிறை செய்து அனைத்துலக முறையாக அவப்பெயர் வாங்காமல் அவர்களை அந்தந்த இடங்களிலேயே கொலை செய்து விடும்படியும் அறிவுரை கூறியுள்ளார்.

இதன் பின்னர் சே.ஆர். செயவர்த்தனா இந்தியத் தலைமை அமைச்சர் இந்திராகாந்தியின் சிறப்புத் தூதுவருடன் பேசும்பொழுது திருகோணமலைத் துறைமுகம் சிறிலங்கா அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதிலிருந்தே அங்கு ஏதோ சூது நடக்கின்றது என்பதை யாரும் புரிந்து கொள்ளலாம். இவை தவிர மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்குக் கூடிய அதிகாரங்கள் கொடுத்து அவற்றை மாகாண அவைகளாகவோ அன்றி வேறேதாவதாகவோ ஆக்கி ஈழச் சிக்கலைத் தீர்க்கலாம் என்றும் சே. ஆர். பார்த்தசாரதியுடன் பேசியுள்ளாராம்.

இச்சமயத்தில் ஈழதேச மக்களுக்கு மாத்திரமல்லாமல், இந்திய அரசின் கவனத்திற்கும் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றோம். இலங்கையில் இருக்கக்கூடிய அனைத்துத் தமிழ் பேசும் மக்களின் சிக்கலுக்குத் தீர்வு சமநிலைத் தனி ஈழமே தவிர வேறொன்றுமில்லை. ஏனெனில் ஈழதேச மக்கள் தமது விருப்பத்திற்காகவோ, அன்றி, உலகத்தில் உள்ள தமிழனுக்கு நாடில்லை என்றோ நாடு கேட்கவில்லை. மாறாக 35 ஆண்டுகளாகச் சிங்களப் பெருந் தேசியக் கருத்தால் அடக்கப்பட்டு, அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டு எமது இனமே திட்டமிட்டு அழிக்கப்படும் சூழ்நிலை தோன்றிய பின்பே நாம் தனிநாடு கோரிப் போராடத் தொடங்கினோம். 1981-ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்றங்களை உருவாக்கி அதனைக் குட்டிப் பாராளுமன்றம் என்றும் இதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் சிக்கல் தீர்ந்து விடும் என்றும் தம்பட்டம் அடித்தார்கள். ஆனால் நடந்ததென்ன? மாவட்ட வளர்ச்சி மன்றம் என்பது வெறும் காற்றடித்த பை. இதனால் மக்களுக்கு எவ்வகை விடுவிப்பும் இல்லை என்று மா. அ. அவைத் தலைவர்களே ஒப்புக்கொண்டார்கள். நிலைமை இப்படி இருக்கும்பொழுது மாவட்ட இணைப்புகள் என்பதோ அன்றி மாகாண அவை என்பதோ இயலுமென்ற செய்தியா? எளிய சிறுசிறு சலுகைகளையே நடைமுறைப்படுத்த முடியாமல் எல்லாவற்றையும் ஏட்டளவில் வைத்துக் கொண்டிருக்கும் சிறீலங்கா அரசு, தமிழ்பேசும் மக்களுக்குக்கூடுதலான உரிமைகளைக் கொடுக்கப் போகின்றதென்றால் அது வெறும் பகடிக் கூத்து. சில சலுகைகளையே நடைமுறைப்படுத்த முடியாத அரசு எங்களுக்குக் கூடுதலான உரிமைகளைத் தரும் என்பது எப்படி இயல்வதாகும்? அப்படித்தான் தந்தாலும் கூட அவை நடைமுறைப்படுத்தப்படுமா? இவையெல்லாம் மிகவும் ஆழமாகச் சிந்திக்கப்படவேண்டிய கேள்விகள் ஆகும்.

ஒன்றிய தேசியக் கட்சி பதவிக்கு வந்து 6 ஆண்டுக் காலத்தில் இதுவரை 4 முறை இனக் கலவரம் நடந்துள்ளது, தொடக்கத்தில் இனக் கலவரங்களாக இருந்த இவை 1983-ஆம் ஆண்டுடன் இனப் படுகொலையாக மாறியுள்ளது. இவ்வினப்படுகொலையைத் தடுப்பதற்குப் பகரமாகச் சிங்கள இனவெறியர்களுடன் கை கோத்து இனப் படுகொலைகளுக்கு மேலும் புகை போட்ட சே.ஆர். செயவர்த்தனா தமிழ் பேசும் மக்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் தரப்போகின்றாராம். இது வேடிக்கையாய் இல்லையா? அஃதாவது ஒரு தேசிய இனத்தைப் பெரும் கொலைகளிலும், அழிவுகளிலும் இருந்து காக்க முடியாத, இல்லையேல் இனப் படுகொலைகளுக்கே காரணமாய் இருக்கும் ஓர் அரசின் கீழ், நாம் தொடர்ந்து ஒன்றாய் வாழ முடியுமா? எனவேதான் கூறுகின்றோம், இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் ஒட்டுமொத்த சிக்கலுக்குத் தீர்வு ஈழமே தவிர வேறொன்றுமில்லை. ஏனைய தீர்வுகள் சிலசமயம் தற்காலிகத் தீர்வுகளாய் இருக்குமேயன்றி நிலையான தீர்வுக்காய் இருக்க முடியாது.

இங்கு இன்னுமொரு முகாமை உண்மையை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். சிறீலங்கா அரசு திருகோணமலைத் துறைமுகம் என்பதில் மிக உறுதியாக உள்ளது. பார்த்தசாரதியுடன் பேசும் போதே இவர்கள் இதை நேரடியாகவே குறிப்பிட்டுள்ளார்கள். இதுகூட அமெரிக்க வெளிநாட்டமைச்சரின் கருத்தின் பின்னரே முன் வைக்கப் பட்டுள்ளது. எனவே இன்றும் அமெரிக்க அரசு திருகோணமலைத் துறைமுகத்தில் எவ்வளவு அக்கறையாய் உள்ளது என்பதையும் நாம் நுணுக்கமாக ஆராய வேண்டும். திருகோணமலைத் துறைமுகமானது சிறீலங்கா அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும்வரை, அது இந்தியாவுக்கு ஏதமானது என்பதை இந்திய அரசு விளங்கிக் கொள்ளவேண்டும். அமெரிக்கா சிறீலங்காவினூடு இந்து மாக்கடல் பகுதியில தன்னுடைய ஆளுமையை நிலைநிறுத்த முயற்சி செய்வதையும் நாம் உணரவேண்டும். அமெரிக்காவின் இவ்வாளுமை வெறிக்குச் சீனாவும், பாக்கித்தானும் கூட உடந்தையாய் இருப்பது தெட்டத் தெளிவாக உள்ளது.

எனவே இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் சிக்கலுக்குத் தீர்வு ஈழ தேச விடுதலையே அன்றி வேறெதுவுமாய் இருக்க முடியாது. எனவே ஈழதேச விடுதலைக்காக இறுதிவரை போராடும் நாம் அதே சமயம் ஈழமண்ணில் (இதில் திருகோணமலை உள்ளடங்கும்) அமெரிக்க ஆளுமையின் காலடிச் சுவடு படவும் அனுமதிக்கமாட்டோம். எனவே உலக அமைதியையும்), மாந்த விடுதலையையும் விரும்பும், இந்திய மக்களே, அனைத்துலக முற்போக்குப் போராளிகளே ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு உங்கள் முழு ஒத்துழைப்பைத் தாருங்கள்.

— ஆசிரியவுரை
— ஈழமுழக்கம் (நவம்-83)

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

இந்திய அரசியல் சட்டம் பார்ப்பனியச் சார்புடையது!

இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியவர் எழுவர். அதில் நால்வர் பார்ப்பனர்.

1. டி.டி. கிருட்டிணமாச்சாரியார்.
2. வயவர். அல்லாடி கிருட்டிணசாமி அய்யர்.
. கே. எம். முன்சி.
4. திருமலை இராவ்.
5. ஒருவர், தாழ்த்தப்பட்டவர்—அம்பேத்கர்.
6. ஒருவர் கிறித்துவர்.
7. ஒருவர் முசுலீம்

நம்மைநாம் வீழ்த்துமோர் நாய்த்தன்மை போல

ஒய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனுய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

தொகுதி-2 இதழ் எண் : 30 (8-1-84) பகுதி 2-3

தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கைக்குரல் முழக்கப்பட வேண்டும்!

இந்தியாவில் உள்ள தேசிய இன மக்கள் உரிமை எழுச்சிக்காகப் போராட வேண்டிய காலகட்டம் இது. தில்லியின் வல்லாட்சியானது, இன்றைய நிலையில் அனைத்துத் தேசிய இனங்களின் தனிவளர்ச்சியை ஏதாமொருவகையில் ஒடுக்கிக் கொண்டே வருகிறது. அசாமியரின் இன எழுச்சிப் போராட்டத்தையும், பஞ்சாபியரின் தன்னதிகாரக் கோரிக்கை எழுச்சியையும் தன் வல்லதிகாரக் கொடுங்கைகளால் கடுமையான அடக்கு முறைகளின் வழி, அடக்கி ஒடுக்கப் பார்க்கிறது தில்லி. தேசியம், ஒருமைப்பாடு என்னும் முதலாளியக் கோட்பாடுகளின் அடிப்படையில், மாநிலங்களின் நயன்மையான இன நலக் கோரிக்கைகளைப் புறக்கணிப்பதும், இழிவுபடுத்துவதும், படைத்துறைகளையும் காவல்துறையையும் கொண்டு வன்முறைகளை ஏவி விடுவதும் தில்லியின் வழக்கங்களாகி விட்டன. பொதுவாகவே, இந்தியா தன்னுரிமை பெற்ற நாளிலிருந்து, அதன் ஓரினக் கருத்துக் கோட்பாடு, ஆரியத்தின் சார்பாகவும், அவ்வினத்தின் சாதிய, மதவியற் கொள்கைகளை நிலைநிறுத்தும் முயற்சியாகவுமே, இருந்து வருகிறது.

தென்னாட்டுத் திரவிட இனங்களிடையில், இதுபற்றிய ஒரு முணுமுணுப்பு இடை நாளிலிருந்தே இருந்து வந்தாலும், போதிய இனநலக் கருத்தெழுச்சிக்குரிய சரியான வடிவம் கிடைக்காமல், தேசியப் போர்வையில், அவை மறைக்கப்பட்டே வந்திருக்கிறது. ஆனல் தில்லியின் கரவான போக்கை, இக்கால் தென்மாநிலங்கள் நன்குணர்ந்து வருகின்றன. தேசிய இனங்களின் உரிமைக் கிளர்ச்சிகளை வித்திட்டு வளர்த் தெடுக்க வேண்டிய இந்தியப் பொதுவுடைமைக் கட்சி கூட, ஏனே தன்னைப் பிற்போக்கு ஆற்றல்களுடன் இணைத்துக் கொண்டும், அக்கட்சிக் கோட்பாடுகளுக்குப் புதுவகையான விளக்கங்களைக் கூறிக் கொண்டும் தில்லியின் இன எழுச்சி ஒடுக்கல் முறைக்கே தன் மறைமுக 'ஆதரவைக் கொடுத்து வருகிறது,

இலங்கைத் தமிழர் சிக்கல் அனைத்துலகப் பார்வைக்கு வளர்ந்து விட்ட இந்நிலையில், தமிழ்த் தேசிய இனம் ஒரு புதிய எழுச்சி பெற்றுத், தமிழர்களுக்கென ஒரு தனிநாட்டைச் சமைத்தெடுக்கவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டு வருகிறது. எனவே, இந்தக் கால நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழகத் தமிழர்களும், என்றே எழுப்பப்பட்டுப், பலவகையான அரசியல் சட்டச் சூழல்களால் கைவிடப் பெற்ற, அல்லது தள்ளி வைக்கப் பெற்ற, தனித்தமிழ்நாட்டுக் கோரிக்கையை முழுமுச்சுடன் செயல் படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது என்றே நாம் கருதுகிறோம்.

இக்கால் உள்ள தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கு, ஆட்சியில் உள்ள எதிர்க்கட்சியைக் குறைகூறுவதும், அதை ஆட்சியிறக்கம் செய்துவிட்டுப் பதவியை அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றுவதுமே நோக்கமாயிராமல், தில்லிப் பிணைப்பிலிருந்து, ஒட்டுமொத்தமாகத் தமிழ் நாட்டை விடுவிப்பதையே முழு நோக்கமாகக் கொண்ட போராட்டத்தைத் தொடங்குவதே, தம் தலையாய குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அப்போராட்ட வெற்றியில்தான் எதிர்காலத் தமிழினத்தின் மறுமலர்ச்சியே அடங்கியுள்ளது என்பதைத் தமிழ்த்தலைவர்கள் ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறோம். அத்தகைய எழுச்சிக் குரல் எந்த அணியிலிருந்து, எந்த மூலையிலிருந்து வந்தாலும், அவ்வணியுடன் நம் இருகைகளையும் பிணைத்துக் கொள்ள நாம் என்றும் அணியமாயிருக்கிறோம் என்பதை இப்பொழுதைக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்ற இதழ்த் தொடர்ச்சி :

இனம் ஒன்றுபட வேண்டும் என்பது எதற்கு?-4

முதல் முறை செய்தல் தவறு; இரண்டாம் முறை செய்தல் பிழை; மூன்றும் முறையும் பிறகும் செய்தல் குற்றம்! தவற்றுக்கும் பிழைக்கும் மன்னிபபு உண்டு; குற்றத்துக்கு மன்னிப்பு இல்லை. தண்டனையே உண்டு. இவ்வாறு தண்டனைக் குரித்தாகிய குற்றத்தைப் பொதுநலத்துக்கு வந்தவன் செய்தல் கூடாது என்கிறர். 'எற்றென்று இரங்குவ செய்யற்க; செய்வானேல், மற்று அன்ன செய்யாமை நன்று' என்று வினைத்தூய்மை அதிகாரத்துள்ளும் இந்நிலையைக் கண்டிக்கிறர்.

6 : நல்லாண்மை : (1026)

அஃதாவது, பொதுநன்மை கருதி, எக்கருத்தையும் கூறுவதற்கும், எவ்வினையையும் செய்வதற்கும் ஏற்ற துணிவுடைமை.

ஒருவர் வேறு உலக வினைகளில் ஈடுபடுவது ஆண்மை. பொதுத் தொண்டில் ஈடுபடுவது நல்லாண்மை. அதற்கு மிகு துணிவு தேவை. ஆண்மை தனக்காகவும் தன்னைச் சார்ந்தோருக்காகவும் துணிவாக உழைத்தல். நல்லாண்மை என்பது ஊருக்காகவும் உலகத்துக்காகவும் மிகத்துணிவாக உழைத்தல்.

7 : வன்கண்மையும் பொறையுடைமையும்.

அஃதாவது, அஞ்சாமையும் வினைச் சுமைகளை, எதிர்நின்று தாங்கிக் கொள்ளும் பொறுமையும். (1027)

வன்கண் என்றல் அஞ்சாமை சான்ற கண் என்பது. அச்சவுணர்வு முதலில் உடலைத்தாக்கும்; பிறகு மனத்தைத் தாக்கும்; அதன்பின் அறிவைத் தாக்கும். அச்சத்தால் உடல் தாக்குறும் போது, அதன் உறுப்புகளுள் கண்ணே முதன் முதலில் அச்சத்தை வெளிப்படுத்தும். கண் அஞ்சுதல் என்பது அச்சத்தால் அது இமை மூடுதல. கண்ணஞ்சுதல் என்னும் சொல்லைத் திருக்குறளில் மூன்று இடங்களில் அச்சத்தைக் குறிக்கப் பயன்படுத்துவார் திருவள்ளுவர். (500, 585, 686). உடலால் அஞ்சாத தன்மையைக் கண் மேல் ஏற்றிக் கூறுதல் புலவர் மரபு அஞ்சுகிறகண் மென்கண். துன்பம் உடைய(வர்) கண் புன்கண்.

பொறை - சுமையைத் தாங்குதல். பொதுத் தொண்டு செய்பவர் அதனல் வரும் துன்பங்களுக்கு, உண்மையான வீரர்களைப் போல, அஞ்சாமல் இருந்து, அவற்றைத் தாங்கிக் கொள்ளுதல் வேண்டும என்பது திருக்குறள்.

8 : பருவம், மானம் கருதாமை (1028)

அஃதாவது இரவு, பகல், வெயில், மழை, பனி, குளிர் இவற்றைப் பொருட்படுத்தாமல் உழைக்கும் தன்மையும், பிறர் தம்மை இகழ்வும் இழிவும் செய்தாலும் குடிமானம் கருதித் தன்மானம் கருதாத தன்மையும்.

பரிமேலழகர் சிறப்பாகப் பொருள் எழுதிய இடங்கள் பலவற்றுள் இந்த இடமும் ஒன்று. மானம் கருதுதல் என்பதைப் பலர் பலவாறு பொருள் கொள்ளலாம். ஆனல் பரிமேலழகரோ எவர் காட்டும் பொருளையும் விட மிகச் சிறப்பான பொருள் தருகிறர்.

' மானங் கருதுதல் - 'இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற இக்காலத்துத் துன்பமுறுவேன் யானே? 'என்று உட்கோடல்.'' இவ்வுணர்வைக் குடிநலம் பேணுவார் ஒருவர் பின்வருமாறு கருதுதல் குடிமானம் கருதுதல. அஃதாவது, ''இவ்வுலகிலுள்ள எவ்வினததாரும் உரிமைபெற்று இன்பமுற்ற வாழ துன்புறுவது எம் குடி ஒன்று மட்டுமோ - என்று நினைத்தல் வேண்டும்- என்க.

9 : இடும்பை தாங்கும் உடம்பு :

அஃதாவது, மனம், உயிர், மெய் இவற்றுக்கு வரும் எல்லா வகையான துன்பங்களையும் பொறுத்துக் கொள்ளும் நெஞ்சுரன், உயிர்த்திறன், வலிந்தவுடல் முதலியவற்றேடு, பொது நிலையான் வரும் இன்ப நலன்களில் மனம் நாடாத தன்மையும்.

அனைத்தையும் தாங்கிக் கொள்ளும் மனவுரன். உயிர்த்திறன் ! உடலை ஊக்கமிழக்கவோ, நோய்வாய்ப் படவோ செய்யாத உயிர்த்திறன்.

அனைத்துக்கும் நிலைக்களனுகவுள்ள உறுதிசான்ற உடல். உடல் நலிவுறின் பொதுப்பணி கெடும் என்க.

10 : அடுத்தூன்றும் நல்லாள் உருவாக்கம்.

அஃதாவது, தமக்குப் பின்னர், தொடர்ந்து பணியாற்றத், தம்போல் திறனும் உரனும் நல்லுள்ளமும் வாய்ந்த வழிமுறை மறவன் ஒருவனையோ சிலரையோ தேர்ந்து பயிற்றி உருவாக்கும் தன்மை.

நல்லாள் என்பது மக்கள் மேல் அன்பும், அவர்களை ஈர்க்கும் திறனுடைய சொல்லாற்றலும் எழுத்தாற்றலும் வினையாற்றலும் உடைய ஒருவரை என்க.

மேற்கூறிய பத்துத் திறப்பாடுகளும் ஒருங்கே கொண்ட ஒருவரே, மக்கள் நலப் பணியைத் திறமையாகவும் வெற்றியாகவும் செய்வதற்கு ஏற்றவராக இருக்க முடியும்.

இத்திறப்பாடுகளில் எத்தனைத்தகுதி நிலைகளில் குறைவோ கூடுதலோ,எற்படுகின்றதோ அத்துணையளவில்விளைவும்கூடவும் குறையவும் செய்யும் என்று கருதிக் கொள்க. (தொடரும்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தாழ 1000 பொறியாளர்கள் அலுவலகப் பணியாளர்கள், பிற பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் பெறும் சம்பளம் நம் தமிழ் நாட்டு அரசு வழங்கும் சம்பளத்தைப் போல் ஏறத்தாழ இருமடங்குக்கு மேல். ஆனல் அவர்களுடைய தொழில் திறமையை இங்கு வந்துதான் அரசின் பொறியாளர்களிடம் பயிற்சி எடுத்துக் கொள்வதன் மூலம் பெறுகின்றனர். அவர்களில் 995 பேர் வடநாட்டினர் அல்லது பிறமாநிலத்தினர்.

ஒருபக்கம் தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரி,தொழில் நுட்பக்கல்லூரி, பிற பயிற்சிக் கூடங்கள் என்று ஆண்டுக்கு ஆண்டு திறந்து ஆட்களைப் பயிற்றிவிடுவது. ஆனல் உருவாகக்கூடியவேலைவாய்ப்புகளை பிறமாநிலத்துக்காரர்களுக்குத் தாரை வார்ப்பது.இந்த இழிவு நிலை எதற்கு?

அப்படி வந்தவர்கள் பேசுவது எல்லாம் இந்திதான்! இந்தி தெரியாத கூலிக்கு வரும் தமிழ்ப்பெண்களிடம் தரக்குறைவான இந்திப்பேச்சு இந்நிலையில் சிறு சிறு வேலைகளுக்குச் சுற்றுவட்டாரத்தில் இருந்து தமிழர்கள் சிலரை (அதிகம் 20 பேர் மட்டுமே) சேர்த்திருந்தனர். அவர்களில் ஐந்துபேரை 120 வடநாட்டுக்காரர்களும் பிற மாநிலத்துக்காரர்களும் சேர்ந்து திட்டமிட்டு அடித்துக் கொல்லும் அளவிற்குத் துணிந்துவிட்ட நிலையில், பிற தமிழர் நலம் என்று பேசி வயிறு வளர்த்துக் கட்சிகள் தொழிற்'சங்கம்' எல்லாம் கைவிட்ட நிலையில், நம் உலகத் தமிழின, முன்னேற்றக் கழகப்பெரியார்மாவட்டக்கிளை உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கடந்த 28.12.83 அன்று எச்.சி.சி அலுவலகம் முன்பே தமிழர் உரிமைப் பாதுகாப்புப் பொதுக் கூட்டம் நடத்தி எச்.சி.சி. தொடர்ந்து வேலை செய்ய விரும்பினல் கீழ்க்காணும் கடமைகளை வரும் பொங்கல் திருநாளைக்குள் நிறைவேற்ற வேண்டும் என்னும் அறிக்கையினை வெளியிட்டது.

1. தமிழ்நாட்டில் இயங்கக் கூடிய எச்.சி.சி. அலுவல்களில் 90% வேலைகளை அனைத்துப் பதவிகளிலும், அரசினரின் ஒதுக்கீட்டு முறைப்படி, நேரடியாகவோ, அல்லது, வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமோ தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

2. மீதி 10% பணிகளுக்குத் தமிழ் தெரிந்த பிற மாநிலத்தவரையே அமர்த்தவேண்டும். ஏனெனில், இந்தி தெரியாத தமிழ்ப் பெண்களிடம் வடவர்கள் பேசும் முறைகள் தமிழர்களுக்கு இழிவைத்தருகின்றன.

3, எச்.சி.சி. அலுவலகத்தில், பணியாற்றக்கூடிய சிறிய தமிழ் ஒப்பந்தக்காரர்கள், பிற தொழிலாளர்கள் ஏமாற்றப் படாமல் இருக்கும் பொருட்டு அவர்களுடன் தமிழ் மொழியிலேயே தொடர்பு கொள்ளுதல்-ஆகியவையாகும்.

எனவே, தம்மைத் தமிழ் இனத்தின் தனிப்பெரும் தலைவர் என வெளிகாட்டிக் கொண்டிருக்கின்ற தமிழக முதலமைச்சர் ம. கோ. இரா. அவர்கள், அண்மையில் பெரும்பான்மை ஏழை எளிய தமிழ்ப் பெருமக்கள் நம்பிக்கையினைப் பெற்றுள்ள காரணத்தால்,

(தொடர்ச்சி முதல் பத்தி)

(3-ஆம் பத்தித் தொடர்ச்சி)

அவர்களை ஏமாற்ருது இருக்க வேண்டியதும், அவர்களின் எதிர்காலத்திற்கு நல்வழி அமைப்பதும், இதுபோன்ற தமிழ் இனத்தின் வேரிலேயே வெந்நீர் பாய்ச்சக்கூடிய கொடுஞ்செயல்களை உடனே களைய முன்வரவேண்டும் என்றும் அப்போதுதான் தமிழ் நலம் நாடும் பிறரும் ம. கோ. இரா. அவர்களைப் போற்ற முடியும் என்பதையும், இது வரை கவனிக்காது விட்டுவிட்டாலும் இனியாவது, இப்படி வேரை வெட்டும் பணிகளைத் தொடராது நிறுத்தித் தமிழ் இனக்காப்பு அரசாகத் திகழ வேண்டும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றேம்.

இங்ஙனம், உலகத் தமிழின
முன்னேற்றக் கழகம்
பெரியார் மாவட்டக்கிளை.

நாம்கண்ட தில்லை,இங் கிந்நிலம் மேலே!

உ.த.ப. இயக்கத் தலைவர்

திரு. வீரப்பனாரின் தாய்லாந்துச் செலவு!

கடந்த திசம்பர் மாதம் மலேசியத் தமிழ் இலக்கியக் கழகப் பொதுச் செயலரும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவருமான திரு இர.ந. வீரப்பன், மலேசியாவின் வடக்கே ஆயிரம் கல் தொலைவிலுள்ள சீயம் என்ற தாய்லாந்து நாட்டுக்குச், சென்று திரும்பினார். அங்கு தம் இயக்கக் கிளை ஒன்றை நிறுவினார். 1888-இல் தமிழர்களால் கட்டப்பட்ட ஒரே மகாமாரியம்மன் கோயிலையும் கண்டு, அங்கு வாழும் ஏறத்தாழ 300 தமிழர்களில் முகாமையான சிலரைக் கண்டு வந்தார்.

1939 முதல் கோயிலில் தமிழில் வழிபாடு செய்து வரும் 60 அகவையான திரு என். கோவிந்தசாமி என்பவரே, பண்டாரமாகவும், பன்மொழித் திறனுளராகவும் கோயிலை நாள்தோறும் 12 மணி நேரம் நடத்துநராகவும் பணியாற்றி வருகிறார். 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில் நடித்தவராகவும் அதன் படப்பிடிப்பின் போது மொழி பெயர்ப்பாளராகவும் இவர் இருந்திருக்கிறார். தமிழகத்திலிருந்து அண்மையில் வந்த இவரின் துணையாளர் திரு வி. இராசேந்திரன் என்ற 22 அகவை இளைஞர் பயிற்சி பெற்று வருகிறார்.

1830-இல் ஒளிமணி(நவரத்தின)க் கற்கள் விற்க தஞ்சை, மயிலாடுதுறைப் பகுதிகளிலிருந்து உறவினர்களாக வந்த பலர் குடும்பத்துடன் வராமல் இங்குக் குடியேறித் தாய்லாந்துப் பெண்களை மணந்து கொண்டு வாழ்ந்தனர். இவர்களின் தலைவரான வைத்தி(படையாச்சி) என்பவரே இக்கோயிலைக் கட்டியவர் எனக் கோயில் முகப்பில் கல்லால் பொறிக்கப்பட்டுள்ளது 1830-இல் இக்கோயில் பொதுவாக அமைக்கப்பட்டு, இன்று மிகப்பெரிய பளிங்குக் கற்களால் (1955-இல்) வடிவமைக்கப்பட்டு, நாள்தோறும் நூற்றுக்கணக்கான - பெரும்பாலும் தாய்மக்களால் - வழிபடப்படுகிறது. இன்று உலகின் மிகப்பெரிய வைரக் கற்கள் நடைபெறும் வணிக நடுவமான பாங்காக்கில் முதலில் இத்தொழிலை நடத்தியவர்கள் தமிழர்களே என்பது குறிப்பிடத்தக்கது என இவர் வரலாறு கண்டறிந்து கூறுகிறார். இன்று சீனர்கள், ஐரோப்பியர், தாய்லாந்தியர், தமிழ் முசுலீம் வணிகர் ஆகியோரிடம் இத்தொழில் பெருமளவில் நடக்கிறது. இக்கோயிலைச் சுற்றியே தாய்லாந்து தமிழர் வரலாறு இலங்குகின்றது. கடந்த ஒன்றரை நூற்றாண்டாக இங்குத் தமிழர் பண்பாடும், மரபும் பேணப்படுகின்றன; ஆனால் தமிழ்மொழிப் படிப்பும் வளர்ச்சியுமில்லை என்பதை ஒரு குறையாக அவர்கள் கருதவில்லை. குடும்பத்துடன் வாழும். சில தமிழ் முசுலிம்களில் பலர், சோழியா முசுலிம் மன்றமும், தமிழ் முசுலிம சங்கமும் அமைத்துக் கொண்டு வேறுவகையில் சிறப்புடன் தமிழர்களாக வாழ்கின்றனர்.

மாரியம்மன் கோயில் அமைத்த முதாதையர்களில் இன்று தமிழில் பேச எழுதப் படிக்கத் தெரிந்தவர் திரு ந. மாரிமுத்து என்பவர் மட்டுமே உண்டு. இவர் 1930-இல் குடியேறி இந்தியத் தூதரகத்தில் பணியாற்றி 1980-இல் ஓய்வு பெற்ற 64 அகவையினர். அக்காலத்தில் இவரின் தந்தையும் நண்பர்கள் சிலரும் மாட்டு வணிகம் செய்தார்களாம். 1942-இல் நேதாசியின் இந்தியப் படையிலும் பணியாற்றினார். இக்காலத்தில் சயாம் - பர்மா தொடர் வண்டிப் பாலம் கட்டப் போய் ஐம்பதினாயிரம் தமிழர்களில் மறைந்த மிச்சம் மீதியான ஆயிரம் பேரில் ஒருவராக 66 அகவை புத்தத் துறவி சந்தன அடிகளையும், திரு. மதுரை என்பவரையும் கண்டு திரு வீரப்பன், அவர்களுடன் பேசினார். அடிகள் 1942-இல் சயாம் போய் அங்கு தாய்ப்பெண்ணை மணந்தவர்.

'பேங்காக் போஸ்ட்' என்ற ஆங்கில நாளேட்டில் பணிபுரியும் திரு சுந்தரராசு, 1902-இல் அமைக்கப்பட்ட தமிழர் வழக்கறிஞர் நிறுவனத்தில் பணியாற்றும் திரு சேபிரியல், 'பாரத் ஓவர்சீசு பேங்க்' தலைமை மேலாளராகப் பணியாற்றி வரும் திரு ஏ. ஆர். இராமநாதன், இரத்தினம் என்ற முசுதாபா மற்றும் சிலரையும் அவர் சந்தித்தார். திரு. வீரப்பன் அவர்களுடன் வழிகாட்டியாக வந்தவர். திரு ச. மணியம் என்பவர் அவருக்கு உறுதுணையாக இருந்தார்.

1767 முதல் ஒரே குடும்ப அரச மரபினரான மன்னர்கள் ஒன்பது பேர் தாய்லாந்தின் அரசர்களாகும். ஒன்பதாவது அரசரான ஆட்சியின் காலத்தின் புத்தச் சிற்பங்களும் அச்சமயப் பணிகளும் மிகமிகச் சிறப்பாகக் காட்சியளிக்கின்றன. உலகின் மிகப் பெரிய புத்த சமய நாடான இங்கு பாங்காக் நகரில் மட்டும் 400 புத்தக் கோயில்களும், நாடு எங்கும் 27 ஆயிரம் கோயில்களும் உள்ளன. கோயில் நகரக் கோட்டங்கள் எனப் பெயர் பெற்ற இங்கு தமிழ் பயிலத்தக்க வாய்ப்பில்லை மாரியம்மன் கோயில் மூலம் ஞாயிறு தமிழ் வகுப்பு ஏற்படுத்தவும் சமய அடிப்படையில் தமிழைக் கற்கவும் ஏற்பாடு செய்வதற்குக் கலப்புத் தமிழர் குடும்பங்களை வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு நாடு திரும்பினார்.

அவலூர்ப்பேட்டையில் அவல நிலை!

தெருவிளக்குகள் ஓராண்டாக எரிவதில்லை! பொறுப்பானவர்கள் கவனிக்க வேண்டும்!

ஐயா,(தெ. ஆ. மா) அவலூர்ப்பேட்டைச் சிற்றூரில் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு மேலாகத் தெருவிளக்குகள் எரியாமல் உள்ளன. ஆங்காங்கே பகலிலேயே பாம்புகளின் நடமாட்டத் தொல்லையும். அச்சமும் நிறைந்து உள்ளன. இந்நிலையில் இரவில் எங்கள் நிலை, உயிருக்குப் போராடும் நிலைதான். இப்படித் தொடர்ந்து தெருவிளக்குகள் எரியாமல் இருப்பது திருட்டிற்கும், கொள்ளை மற்றும்பிற குற்றங்களுக்கும் துணையிருந்து நடைபெற வாய்ப்பளித்தது போல இருக்காதா? அதற்கு மின்வாரியம் பொறுப்பேற்கலாமா? சட்டம், ஒழுங்கைக் காக்க காவல் துறை இருப்பதாக எண்ணிக் கொண்டு சட்டம் ஒழுங்கைக் குலைக்கும் வகையான குற்றங்கள் நடைபெற மின்வாரியம் துணைபோனதாக ஆகலாமா?

அவ்வாறு முன்னெச்சரிக்கையாக இல்லாததால் தான் அவலூர்ப்பேட்டை குன்றின் மேலுள்ள (மலைமேலுள்ள) கோயிலில் திருட்டு நடைபெற, அங்குள்ள விளக்குகள் எரியாமையும் பெருங் காரணமாக அமைந்துள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

பலபகுதி மக்கள் உந்துவண்டிகளில் வந்திறங்கித் தங்கள் தங்கள் ஊர்களுக்குச் செல்ல இவ்வூர் ஒரு சிறு நடுவமாக உள்ளது. காருவா (அமாவாசை) போன்ற இருட்டுக் காலங்களில் எதிரில் வருவார் போவோர் தெரியாமல் இடித்து மோதி விழுவதும், தமட்டை எனும் பொலி எருதுகளின் நடமாட்டமும் தெரியாமல் அவற்றின் மீது மோதிப்பெரும் ஏதங்கள் (விபத்துகள்) ஏற்படுவதுமாக நடந்துவருகின்றன. ஆகவே அருள்கூர்ந்து, ஐயா அவர்கள் மனதிரங்கிப் பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தருகின்ற வகையிலே மின்வாரியம் உரிய நடவடிக்கை எடுத்து மின்விளக்குகள் தொடர்ந்தெரிய ஏற்பாடுகள் செய்வதற்கு வழி செய்ய வேண்டுமாய்ப் பணிவாய் வேண்டுகின்றோம்,

இங்ஙனம், உண்மையுள்ள, சா. இராமலிங்கம்
செயலாளர், (உதமுக) அவலூர்ப்பேட்டை.

(இவரோடு அங்குள்ள அதிகாரிகள், பொதுமக்கள், வணிகர்கள், பொதுநல ஊழியர்கள் ஆகியோரின் 55க்கும் மேற்பட்டுக் கையெழுத்திட்டுள்ளார்கள்.)

தமிழ் நாட்டில் பிறமொழிகள் பேசுவோர் தொகை!

(1971-ஆம் ஆண்டுக் கணக்குப்படி).

(1)	தமிழ் பேசுவோர் :	3,48,17,421	84.51%
(2)	தெலுங்கு ,, :	36,00,078	8.74%
(3)	கன்னடம ,, :	10,56,512	2 56%
(4)	உருது ,, :	7,59,607.	1.84%
(5)	மலையாளம் ,, :	5,59,186	1 36%
(6)	பிறமொழிகள் ,, :	4,06,364	0.99.
மொத்தம் :		4,11,99,168	100%

இலங்கைக்கு இந்திரா அனுப்பிய படைத்துறை உதவி!

1871-இல் திருவாட்டி பண்டார நாயகாவின் ஆட்சியில், நாடு தழுவிய கிளர்ச்சி ஒன்று நடந்தது. அதை அடக்குவதற்காக இந்தியாவிலிருந்து திருகிறக்கை (Helicoptor) ஊர்திகளையும் படைகளையும் அனுப்பி உதவினார் தலைமையமைச்சர் இந்திரா காநதி.

அயல் மாநிலங்களில் தமிழர்கள்!

1. அந்தமான் நிக்கோபார் தீவுகளில் 30 ஆயிரம் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.
2. ஆந்திர மாநிலத்தில் திருப்பதி, சித்தூர் மாவட்டத்தில் நகரி, புத்தூர், சித்தூர், அனந்தபூர் ஆகிய ஊர்களில் தமிழர்கள் வாழ்கின்றனர். சித்தூர் மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகையில் 30 விழுக்காட்டினரும், செகந்திராபாது, ஐதராபாது மாவட்டத்தில் வாழும் மக்களில் 40 விழுக்காட்டினரும், நெல்லூர் மாவட்டத்தில் ஏறத்தாழ 10,000 பேர்களும் பிறமாவட்டங்களில் கணிசமான தொகையினருமாகத் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆந்திராவில் உள்ள அரசு அலுவலகங்களில் குறிப்பிடத்தக்க அளவில் தமிழர்கள் பணியாற்றுகின்றனர்.
3. உத்திரப்பிரதேசம்: இம்மாநிலத்தில் காசி, அலகாபாது, ஆக்ரா, அலிகார், இலக்னோ ஆகிய நகரங்களில் பெருவாரியாகவும், அலிகார் முதலிய இடங்களில் சிறு அளவினராகவும் தமிழர்கள் வாழ்கின்றனர்.
4. கருநாடகம்: இம் மாநிலத்தின் மக்கள் தொகையான ஏறக்குறைய 3 கோடியாக உள்ளதில், ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் (90 இலக்கம் பேர்) தமிழர்கள். அவர்களில் பெரும் பகுதியினர் வெங்காலூர் (பெங்களூர்) கோலார், மைசூர் நகர்களிலும் நகர்ப் புறங்களிலும் வாழ்கின்றனர்.
5. கேரளம்: கேரள மக்கள் தொகை 2 கோடியே 3 இலக்கம். இதில் 29.55 விழுக்காட்டினர் (ஏறத்தாழ 6 இலக்கம்) பேர் தமிழர்கள். இவர்கள் திருவனந்தபுரம், கோழிக் கோடு, இடுக்கி, பாலக்காடு, கோட்டயம், கொல்லம், எர்ணாகுளம், பீர்மேடு, மூணாறு, சித்தூர் (கேரளப் பகுதி) ஆகிய இடங்களில் வாழ்கிறார்கள்.
6. தில்லி;இங்கு ஏறத்தாழ 3 இலக்கம் தமிழர்கள் வாழ்கிறார்கள்.
7. பஞ்சாப்; சண்டிகார், பாட்டியாலா பகுதிகளில் கணிசமான தமிழர்கள் உள்ளார்கள்.
8. புதுச்சேரி; இதன் மொத்த மக்கள் தொகை 4,71,707 ஆகும். இதில் ஏறக்குறைய 29.68 விழுக்காட்டினர் (1, 40,000) தமிழர்கள்.
9. மேற்கு வங்காளம்: இங்கு கல்கத்தா, அவ்ரா, முதலிய நகரங்களில் கணிசமான தொகையினராகத் தமிழர்கள் வாழ்கின்றனர்.

அடிப்படை 'தமிழும் தமிழரும்' பர். ந. கடிகாசலம்.

வறுமை நாடான இந்தியாவின் குடியரசுத் தலைவர் மாளிகை!

0 இந்தியக் குடியரசுத் தலைவரின் மாளிகை சர் எட்வின் லுட்யென்சு (Sir Edwin Lutyens) என்ற கட்டிட அறிஞரின் வரை படத்திற்கு ஏற்ப 1921 முதல் 1929 வரை 8 ஆண்டுக் காலம் கட்டப்பட்டது.

0 இதில் 340 அறைகள் உண்டு.

0 அழகுப் புனைவுப் பொருள்கள் உள்ள அறைகள் மட்டும் 37 உள்ளன.

0 பூத்துக் குலுங்கும் பூங்காக்கள் நிறைந்த கற்கோட்டை இது.

0 5 அடுக்குகளாக அமைந்திருக்கும் இம்மாளிகையில் உள்ள 1850 ஊழியர்களுக்கும், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 10 000 பேர்களுக்கும் குடியிருப்புப் பகுதிகள் தனித்தனியே உண்டு.

0 நாள் ஒன்றுக்கு ஆயிரம் விருந்தினர்களுக்கும் கூடுதலாகச் சமையல் செயது உணவளிக்க 400 சமையல்காரர்கள் இங்குப் பணியாற்றுகிறார்கள்.

0 குடியரசுத்தலைவரின் மதுக்குடிப்பு அறை உலகப் புகழ் பெற்றது. இந்த அறை நிலத்துக்குக் கீழே கட்டப்பட்டுள்ளது.

0 ஆறு வெளிநாட்டு மகிழுந்துகள், 200 ஓட்டுநர்கள் நாளெல்லாம் இந்த மாளிகையில் எப்பொழுதும் அணியமாக உள்ளார்கள்.

0 ஆண்டு ஒன்றுக்குக் குடியரசுத் தலைவரின் பராமரிப்புச் செலவு மட்டும் ஒரு கோடி உருபா. மாதத்திற்கு எட்டு இலக்கத்து 34 ஆயிரம். நாள் ஒன்றுக்கு இருபத்தேழாயிரத்து எண்ணூறு உருபா. இதில் அவருடைய சம்பளமோ, அவருடைய பணியாட்களின் சம்பளமோ அடங்காது.

0 குடியரசுத் தலைவரின் மாதச் சம்பளம் 10 ஆயிரம் உருபா

0 அயல் நாட்டுத் தலைவர்கள் வந்தால் அவர்களுக்கென விருந்தினர் பகுதிகள் தனியே உண்டு. அவர்களுக்காகும் செலவுகள் தனி.

0 ஒவ்வொரு நாளும் குடியரசுத் தலைவர் மாளிகையில் பரிமாறப்படும் சமையல் வகைகள் முன்கூட்டியே அச்சிடப்படும். இதற்காக மட்டும் ஓர் அச்சகம் தனியே இயங்குகிறது. 0

தமிழனைத் தமிழனே தாழ்த்துகின்றானே!

தமிழீழத்தைப் பற்றி எழுந்தன இந்த நூல்கள்! படித்துப் பாருங்கள்!

1, இந்திய அரசே இன்னுமா உறக்கம்?
ஆசிரியர் : வழக்கறிஞர் ப. அருளி, தமிழூர்,
விலை : ஐந்து உருபா. பக்கம் : 100.
கிடைக்குமிடம் : அறிவன் பதிப்பகம்.
2/5 காளிகோயில் தெரு,
தமிழூர் (திலசுப்பேட்டை), புதுச்சேரி - 9.

இலங்கையின் தொன்மை வரலாறு, சிங்களர் அத்தீவிற்கு வந்து குடிபெருக்கி, அரசு அமைப்பதற்கு முன் தமிழர்கள் வாழ்ந்த நிலை, சிங்களரின் ஆட்சி விரிவு, வேற்று நாட்டவர் ஆட்சி, இன்றைய இலங்கையின் ஆட்சியமைப்புகள், அங்குள்ள மதங்கள், முதலியவற்றுடன், செயவர்த்தனே குடியரசுத் தலைவரானதற்குப் பின் தமிழினத்திற்கு ஏற்பட்ட சட்டக் கொடுமைகள், குமுகாயத் துறைக் கீழறுப்புகள், தமிழின அழிவுகள், அவற்றை எதிர்த்துத் தமிழினம் நடத்திய - நடத்தி வரும் போராட்ட முயற்சிகள், தொடர்ந்து நடைபெற்ற இன அழிப்பு முயற்சிகள், இறுதியாகக் கடந்த சூலை '83-இல் நடந்த தமிழினக் கொடுமைகள் - ஆகியவை பற்றி வரலாற்றுச் சான்றுகளுடன் எழுதப் பெற்ற சுருக்கமான வரலாற்று நூல் இது. இறுதியில் இத்தனைக் கொடுமைகளையும் கண்டுங் காணாமல், எந்த நடவடிக்கையும் எடுக்காமல், ஏதோ சில தடுப்பு முயற்சிகளைப் பார்த்து, 'இந்திய அரசே இன்னுமா உறக்கம்' — என்று மனம் வெதும்பிக் கேட்கிறார் ஆசிரியர். இலங்கையில் நடைபெறும் போராட்டங்கள் பற்றிய தெளிவான செய்திகளைச் சரியான நாள் குறிப்புகளுடன் தந்துள்ளார் ஆசிரியர். தமிழின முன்னேற்றம் நாடும் அனைவரும் வாங்கிப் படித்தறிந்து கொள்ள வேண்டிய செய்திகள் அடங்கிய நூல் இது. ஆசிரியரின் முயற்சியை மிகவும் பாராட்டுகின்றோம். கலப்பற்ற தூய தமிழில் எழுதப் பெற்றுள்ளது, இதன் தனிச் சிறப்பாகும்.

2. தமிழீழ விடுதலையின் விலை.
ஆசிரியர் : புலவர். பொதிகைச் செல்வன்
பக்கம் : 50 + 16 விலை உருபா 5.
கிடைக்குமிடம் : பொதிகைப் பதிப்பகம்.
6/36 - அண்ணா தெரு,
காளிங்கராயன் பாளையம் புதூர், பவானி - 1

33 பாடல்கள் அடங்கிய இனிய பாடல் நூல் இது. இசைப்பாடல்களும், சந்தப் பாடல்களும், பண்டிலப் பாடல்களும் சிறந்து விளங்குகின்றன. தமிழீழத்தில் தமிழின மக்களுக்கு நேர்ந்த கொடுமைகளால், உள்ளக் கொதிப்புடன் பாடல்கள் வெளிப்பட்டுள்ளன.

சிங்களத் தீவினில் செந்தமிழர் ஓலம்!
செவியெலாம் கேட்டுத் திகைத்திடும் ஞாலம்!
எங்குமே காணாத இனப்படு கொலையே!
இமயம்போல குவிந்திடும் தமிழ்ப் பிணமலையே!

— என்று முதல் பாடல் அவலச் சுவையில் தொடங்குகிறது.

நாட்டினில் அங்கொரு காட்டாட்சி! - சிங்கள
நாய்கள் செய்யும் கூட்டாட்சி!
காட்டு விலங்குகள் கண்டாலும் - உள்ளம்
கலங்கிடச் செய்யும் வேட்டாட்சி!

— என்று நெஞ்சங் குமுறிக் கண்ணீர் வடிக்கிறார் பாவலர்.

நெஞ்சம் நடுங்குதடா - புலன்கள்
அஞ்சி ஒடுங்குதடா!

— என்று நெஞ்சு கொதித்து அலமருகின்றார் ஆசிரியர்.

மறத்தமிழினத்தை மாய்த்திட நினைத்தாய்!
மடமைபால் சாவினை மகிழ்வுடன் அணைத்தாய்!
புறப்பொருள் கண்டவா பொங்கி எழுந்தோம்!
புவியில் உன் இனத்தைப் பூண்டோடொழிப்
போம்!

— என்று புலவர் வீறுடன் முழங்கி உறுதி பூணுகிறார்.

வஞ்சகச் சிங்களரால் - அங்கு
வாழும் தமிழர்கள் மாளும் நிலைதனை
மிஞ்ச விடலாமோ ?. — உயர்
வீர மரபினில் வந்த தமிழனே!

— என்று தமிழனைப் பார்த்து வினா எழுப்பி வீரமூட்டுகிறார். மற்றொரு பாடலில்,

உருசியத்துச் சார்மன்னன்! உகாண்டாவின்
இடி அமீன்! ஊக்கம் மிகக
செருமனியின் இட்லர்! இவர் மூவரையும்
தூயவராய்ச் செய்து விட்டான்,
உருவற்ற தென்னிலங்கைச் செயவர்த்தன்
எனும் தீயன் ஒருவன்!

— என்று செயவர்த்தனை அவர் படம்பிடிக்கும் பாங்கு இவர் மனச்சூழலையும் வரலாற்றறிவையும் நன்கு காட்டுகிறது. குட்டிமணி தனக்குத் தூக்குத் தண்டனை வழங்கிய முறைமன்ற நடுவரின் முன் வீரம் பொழிந்த உரைகளை, 'விடுதலைப் புலியின் வீர முழக்கம்', எனனுந் தலைப்பில் ஒரு பாடலாக வடித்துள்ளார் புலவர்! அவர் தம் மனைவிக்கு இறுதியாக எழுதிய வீரக் கடிதமும் 'கண்ணீர்க் கடிதம்' என்னுந் தலைப்பில் பாடல் உரு பெற்றுள்ளது.

அழுங்குகின்ற தென்னுள்ளம்! தமிழனாக
இடகோ! ஏன்பிறந்தேன்? அழிகின்றேனே!

— என்று ஈழக்கொடுமை தாளாது தம்மையே சாவித்துக் கொள்ளும் உளத்தகைமையும் அழுங்கலும் பாடலடிகளில் நன்கு வெளிப்படுகின்றன!

தமிழீழத்தில் நடந்த கொடுமைகள் அட்டைப் படமாக மிளிர்கின்றது' நல்ல பாடல்களின் நல்ல தொகுப்பு! ஆசிரியரைப் பாராட்டுகின்றோம்!

3. செங்நீர்க் கடலில் ஈழத்தமிழன்!
ஆசிரியர் : பேராசிரியர் தமிழ்க்குடி மகன். க,மு.
பக்கம் : 180. விலை : 5 உருபா.
கிடைக்குமிடம் : அறிவொளி பதிப்பகம்.
338. வடக்கு மாசி வீதி, மதுரை-1

தமிழீழத்தில் கடந்த சூலை மாதத்தில் நடந்த தமிழின அழிவுக்குப் பின்; உலகில் உள்ள தமிழர்களிடையே ஒரு பெரும் கிளர்ச்சியும், இனவிடுவிப்பு உணர்ச்சியும் தோன்றி வளர்ந்து வருகின்றன. அதே பொழுது, தமிழீழத் தமிழர்களின் வாழ்க்கை வரலாறுகளிலும், பெரியதோர் ஆர்வம் தோன்றியுள்ளது. எனவே அது தொடர்பான இலக்கியங்களும் வரலாற்று விளக்க நூல்களும் தோன்றி வருகின்றன.

அந்த வகையில் இதுவும் ஒரு நூல். இது கடந்த ஆகத்து, செப்டம்பர் மாதங்களில் மதுரை மாலைமுரசில் தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பாகும்.

அங்குள்ள அமைப்பு, ஆட்சிமுறைகள், தமிழர் தம் வாழ்வியல் முறைகள், அவர்களுக்கு வேலை வாய்ப்புகளில் நேர்ந்து வரும் புறக்கணிப்புகள், கொடுமைகள், அங்கு இதுவரை நேர்ந்த பச்சைப் படுகொலைகள், போராட்டங்கள், அவற்றில் உயிர் நீத்த வீரர்கள், அவர்களின் படங்கள், செயவர்த்தனேயின் இரண்டகத் திட்டங்கள், கடந்த சூலை மாதப் படுகொலைகளைப் பற்றிய விரிவான செய்திகள், — விடுதலை இயக்கங்கள் — இவற்றுடன் ஏராளமான புள்ளி விளத்தங்களுடனும் விளக்கப் படங்களுடனும் இந்நூல் மிகச் சிறப்பாக எழுதப் பட்டிருக்கிறது.

இந்த நூலின் வருவாய் ஈழத்தமிழர்களுக்கு அளிக்கப்படும் என்றொரு குறிப்பும் இந்நூலில் உள்ளது. எனவே, தமிழின உணர்வுள்ளவர்கள் அனைவரும் இதனை வாங்கிப் படிப்பதுடன், அதன் வழி ஈழத்தமிழர் நலன்களுக்குப், தங்கள் கடமைகளைச் செய்தவர்கள் ஆகலாம்.

4. செங்நீரில் மலரும் செந்தமிழ் ஈழம்!
தொகுப்பாசிரியர் : இறையரசன்.
பக்கம் : 96. விலை 5 உருபா.
கிடைக்குமிடம் : மணிமேகலை பதிப்பகம்.
அனந்தராபுரம் — கரூர்வட்டம், 639202.

பாவலர்கள் இறையரசன், கன்னல், புகழேந்தி, முகில், விடியல் விரும்பி — ஆகிய ஐவரும் சேர்ந்து தமிழீழம் பற்றிப் பாடிய 38 பாடல்களின் தொகுப்பு நூல் இது. பாடல்கள் ஒவ்வொன்றும் உணர்வுப் பிழம்பாகவும் கனல் கக்கும் நெருப்புரையாகவும் இயல்கின்றது. பாவலர்களின் கொதிப்புரைகள் சூடு பிடிக்குமானால், சிங்களவர்கள் அச்சூட்டைத் தாள மாட்டாமல் உண்மையிலேயே பொசுங்கிக் கருகிப் போவார்கள்.

'தென்னிலங்கை ஓநாய்கள் தெருவில் கூடித்
திட்டமிட்டுக் கொலைகளவு செய்யலானார்!''

''செங்குருதி கொழும்புண்ணில் கலக்கும் போதே
சிறுத்தைகளின் சிந்தனையில் மலர்ந்த தீழம்!
நங்கையரின் கற்பழிப்பைக் கண்ட பின்னும்
தடியர்களுக் கஞ்சுவதோ தமிழர் வீரம்!''
— கன்னல்.

'வெறிகொண்ட சிங்களனை வேட்டை யாடு
வோம்! — அந்த
வீணர்களை அடக்கிஈழ நாட்டை யாளு
வோம்!''
குறிவைத்தே தாக்கிடுவோம்! குடல் கிழிப்போம்!
— நாம்
குமுறுகின்ற எரிமலையாய்ப் பொங்கி
யெழுவோம்!''
— புகழேந்தி.

''புலியென மாறிவிட்டேன் — ஈழம்
புதுக்கிட எழுந்துவிட்டேன்!
எலிநிகர் சிங்களர்க்கே — சிறை
இருட்டறை திறந்து விட்டோம்.''

''எட்டுத் திக்கும் ஈழ வெற்றி
எதிரொலிக்கப் பாடடா!
இந்த நாட்டின் உரிமை யாவும்
எங்கட் கென்றே ஆடடா!'
— முகில்.

— போலும் வரிகள் சான்றுகள்!

தமிழர், சிங்களவருடன் இனி வாழமுடியாது என்பதைப் பாவலர் விடியல் விரும்பி இப்படிக் கூறுகிறார்.

கீரியும் பாம்பும் ஒன்றாய்க்
கிளைஞர்போல் வாழ்வ துண்டோ?
ஆரியம் தமிழைத் தாழ்த்தி
அரும்புகழ் பெற்ற துண்டோ?
நேரிய வழிச்செல் வோர்முன்
நெடுந்தடை நிற்ப துண்டோ?
பூரியா ரிடத்தே பாயும்
புலிகளா கெஞ்சி வாழும்?

அவர் உள்ளத்தின் உருக்கத்தை இப்படி வெளிப்படுத்துகிறார்.

செந்நீரில் மலர்கின்ற செந்தமிழர் ஈழத்தின்
கண்ணீர்க் கதைகேட்பின் கல்லும் கரைந்
துருகும்!

ஈழத் திருமண்ணில் எங்கள் தமிழினந்தான்
சூழத் தனியரசு தோற்றுவிக்கும் — சூழலும்
நேராதோ? சூழ்ச்சியும் வீழாதோ? என்றுதான்
தீருமோ? எந்தமிழர் தீங்கு?

— என்று பாவலர் இறையரசன் ஏங்கித் தவிக்கிறார்!

வீரரெல்லாம் முரசொலித்துப் புறப்படுங்கள்;
வீணர்களின் குடலுருவி மாலை போட!
தீரரெல்லாம் தினவோடு புறப்படுங்கள்!
தென்னிலங்கைத் தமிழ்ஈழம் அமைப்
பதற்கு!

— என்று அவர் தமிழர் அனைவரையும் தமிழீழப் போருக்கு அழைக்கின்றார்.

— இந்நூலுக்குக் கலைஞர், பேரா. அன்பழகன், கி. வீரமணி, பாவலரேறு, குடியரசு, மீ.சு. இளமுருகு பொற்செல்வி, ஆகியோர் வாழ்த்துகளும், மதிப்புரைகளும் பாராட்டுரைகளும் வழங்கியுள்ளனர்.

பல தூய தமிழில் இலங்குகின்றன. சில இடங்களில் புணர்ச்சிப் பிழைகளும் சீர்ப்பிழைகளும் தென்படுகின்றன. மறுபதிப்பில் களைந்து வெளியிடலாம்.

தமிழ் நாட்டில் உள்ள உயர்ந்த, பிறப்படுத்தப்பட்ட, தாழ்ந்த வகுப்பினர்கள் தொகை!

(1971-ஆம் ஆண்டுக் கணக்குப்படி)

(1)	பார்ப்பனர்கள்	10,39,000	2.52%
(2)	உயர்சாதியினர் (முன்னேறிய வகுப்பினர்)	36,50,000	8.86%
(3)	பிற்படுத்தப் பட்டோர்.	2,88,10,000	69.93%
(4)	தாழ்த்தப் பட்டோர் மற்றும் மலைசாதியினர்	77,00,000	18.69%

தமைமீட்க எழுவோரைப் புறம்வீழ்த்துவானே!

இலங்கைத் தமிழர் சிக்கலும் இந்திய அரசின் தீர்வும்

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"எங்கள் இக்கட்டுபற்றி நாங்கள் இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்திச் சலித்து விட்டோம். அதிலும் குடியரசுத் தலைவர் செயவர்த்தனவுடன் பேச்சுக்களை நடத்துவதில் நாங்கள் நம்பிக்கை இழந்துவிட்டோம். ஆனால், இந்த முறை இந்தியாவின் நடுவண் அரசு இதில் தலையிட்டிருக்கிறது. எனவே, வழக்கமாக எங்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வந்தபின் அந்த முடிவிலிருந்து பிறகு நழுவிவிடுவது போல், இந்தமுறை இலங்கை அரசினால் செய்ய முடியாது. அதனால்தான் நாங்களும் இதற்கு இணங்கி இருக்கிறோம்".

—இவ்வாறு, இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் அமிர்தலிங்கம் அவர்கள், கடந்த திசம்பர் 3,4 நாள்களில் சென்னையில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

அஃதாவது இந்திய அரசின் தலையீட்டின் காரணமாகவே, தாம் செயவர்த்தன அரசுடன் மீண்டும் பேச்சுக்களை நடத்த ஒப்புக்கொண்டதாகக் கூறியிருக்கிறார்.

பொறுப்பு இந்திய அரசின் தலைமீது சுமத்தப்பட்டிருக்கிறது.

இந்திய அரசின் நிலை என்ன?

"இலங்கைத் தமிழர் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள ஆய்வுநிலை முடிவுகளின் அடிப்படையிலும், இலங்கையின் ஒருமைப்பாட்டு வரையறைக்கு உட்பட்ட வகையிலும் இச்சிக்கலுக்கு ஒரு தீர்வு காணப்படும்"

—இதுதான் அதிகார முறையாக அறிவிக்கப்பட்டுள்ள, இந்திய அரசின் கொள்கை.

"இந்தியா எந்தத் திட்டம் அல்லது கோரிக்கையையும் வைக்கவில்லை. திரு. பார்த்தசாரதி இருமுறை இலங்கைக்குச் சென்று அந்த அரசுடன் நடத்திய பேச்சுக்களின் போது உருவாக்கப்பட்டவையே அவை" என்றும் வெளியுறவு அமைச்சர் தெளிவாக்கியிருக்கிறார்.

அஃதாவது அவை செயவர்த்தன அரசின் முடிவுகளே என்று கூறாமல் கூறியிருக்கிறார்.

என்ன அந்த முடிவுகள்?

24 மாவட்ட அவைகளாக இப்போது இருக்கும் ஏற்பாட்டை மாற்றி, 9 மாநில அவைகளாக அமைப்பது.

அவற்றில் வடக்கு—கிழக்கு மாநிலங்களில் தமிழ்பேசும் மாவட்டங்களைக் கொண்டு வருவது.

சட்டமியற்றுதல், சட்டம்-ஒழுங்கு ஆகிய துறைகளில் முடிந்த அளவு தன்னாட்சி அதிகாரங்களை இம்மாநில அவைகளுக்கு வழங்குவது. ஆனால் நாட்டின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பு இலங்கை அரசின் பொறுப்பிலேயே இருந்து வரும்.

தமிழீழத்தின் தலைநகரம் என்று இவர்கள் அறிவித்த திருகோணமலையைப்பொறுத்தவரை தன்னதிகாரத் துறைமுக ஆணைக்குழு ஒன்று அதனை ஆளுமைசெய்யும்.

இவைதாம் அவை. இவற்றில் முந்தைய மாவட்ட அவைகள் மாநில அவைகளாக மாறுகின்றன என்பதைத் தவிர, வேறு எந்தப் புதுமையுமில்லை.

தமிழ்ப் பகுதிகளெல்லாம் ஒரே மாநில அவையின் ஆளுமையின் கீழ்க் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கூட்டணியின் குறைந்த பக்கக் கோரிக்கைகூட தவிர்க்கப்பட்டு விட்டது.

திருகோணமலை தன்னதிகாரத் துறைமுகஆணைக் குழுவினால் ஆளப்படும் என்பதும் வழக்கம் போலவே இருக்கும் என்ற பொருள் படுவதுதான்.

இலங்கையை 9 மாநில அவைகளாக அமைப்பதே இந்திய அரசை ஏமாற்றத் தான் என்பது புரியவில்லையா?

பெரும்பான்மையான மாநில அவைகளின் முடிவு மக்கள் நாயக முறையிலான தீர்வு என்ற பெயரில் தமிழர்களின் கோரிக்கைகளை, அனைத்துலக இசைவுடன் புறக்கணிக்கத்தான் இந்த ஏற்பாடு.

இல்லையென்றால், ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழியினரான சிங்களவர்களுக்கு இது எதற்கு?

தமிழ் மாநிலம்—சிங்கள மாநிலம் என்று இரு பகுதிகளடங்கிய ஒரு நாடாக இலங்கையை அறிவிக்க இணங்கியிருக்கலாமே?

உண்மையாகவே நாட்டைப் பிரிப்பது ஒன்றுதான் தங்களுக்குள்ள மறுப்பு? மற்றப்படி தமிழர்களுக்குரிய தேசிய உரிமைகளை வழங்குவதில் சிக்கலில்லை என்று இலங்கை அரசு கருதுமானால், மலையகத் தமிழர்கள் வாழ்கிற பகுதியுட்பட எல்லாத் தமிழ்பேசும் பகுதிகளுமடங்கிய ஒரு தமிழ்மாநிலத்தை நிறுவ அது ஒப்புக்கொண்டிருக்கவேண்டும்

இந்திய அரசுக்கும் உண்மையாகவே இலங்கைத் தமிழரின் தேசிய உரிமைகளைக் காப்பதில் அக்கறை இருக்குமானால், அது போன்றதொரு ஏற்பாட்டிற்குத்தான் இலங்கை அரசை இணங்க வைத்திருக்க வேண்டும்.

அது செய்யப்படாததால், இலங்கை—இந்தியா இரு அரசுகளுக்குமே உண்மையாகவே இலங்கைத் தமிழ்பேசும் மக்களுக்கு நயன்மை(நியாயம்) வழங்கப்பட வேண்டும் என்பதில் அக்கறையில்லை, 1983 சூலை ஆகத்து இனப்படுகொலைகளால் அனைத்துலக இரக்கத்தைப் பெற்றுவிட்ட தமிழர்களுக்கு நயன்மை வழங்கப்பட்டு விட்டதைப்போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தினால் மட்டும் போதும் என்கிற மனப்பான்மைதான் உள்ளது என்பது தெற்றென விளங்குகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, இந்தியா ஏற்பாட்டின் மூலம் உருவாகும் தீர்வை இலங்கையரசு மீற முடியாது என்பது போலவும், இந்திய அரசின் கட்டாயத்தின் காரணமாகவே தாங்கள் தமிழீழத்திற்கு மாற்றுத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள முன் வந்தது போலவும் திரு. அமிர்தலிங்கம் கதைப்பது, தமிழீழத்திற்காகப் போராட அணியமாகியிருக்கும் தமிழ் மக்களைத் திசைதிருப்புவதே ஆகும்.

இந்த இடைக்கால அமைதி உடன்பாட்டுக்கு இணங்கித் தமிழீழக் கோரிக்கையை நீங்கள் இடைவிட்டு விடுவீர்களானால் உங்களுக்காகத் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற கொதிப்பும் உங்கள் அமைதியைக் கண்டு அடங்கிவிடும்.

ஆகவே, தமிழீழத்தைத் தவிர வேறு ஒரு தீர்வுக்கும் ஒத்துக்கொள்ளாத நிலைப்பாட்டை நீங்கள் மேற்கொள்வதுதான் இலங்கைத் தமிழ் மக்களிடம் உங்களுக்குள் கடப்பாடு ஆகும்.

— ஆசிரியவுரை. எழுகதிர். நவம்-திசம் 83

விடுதலை இயக்கங்களின் கருத்து கவனிக்கப்படவில்லை!

ஈழத்திற்கான எதிர்கால தீர்வு குறித்தும், மக்கள்நாயக, தலைமையான தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகள் குறித்தும், நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாய் உள்ளோம்.

1976, வடக்குக் கோட்டை தீர்மானத்தின் மூலம், அறிவியல் சமநிலைத் ('விஞ்ஞான சோசலிச) தமிழீழம்' என கொள்கையறிவிப்புச் செய்தவர்கள். 1976-ஆம் ஆண்டுக்குமேல் கொள்கையை மெல்ல மறக்கத் தொடங்கினர். மாவட்ட வளர்ச்சி மன்றத்தைத் தூக்கிப் பிடித்தார்கள். ஆறு மாதங்களுக்குள்ளாகவே அதன் வெற்றுத்தன்மை அம்பலத்திற்கு வந்தது. இவர்களோ மக்களை விட்டு-வெகு தூரம் விலகிச் செல்லத் தொடங்கினர். மக்களின் எண்ணங்களுக்கு மாறாக இவர்கள் செயல்படத் தொடங்கினர்.

1983-ஆம் ஆண்டு மீண்டும் கேடான வகையில் ஈழவர்களைச்சிங்களம் இரத்தத்தில் நனைத்தது. உலகம் தன் கவனத்தை ஈழவர்பால் திருப்பியது. இவ்வாய்ப்பான சூழ்நிலையைக்கூட கூட்டணித் தலைத்தலைமைஈழத்தின் நிலையான தீர்வுக்குப் பயன்படுத்தவறியது. எப்படிப் பயன்படுத்துவது என்பதன் வழிமுறைகூட தெரியாமல் தடுமாறியது. ஆனால் பேச்சுரையில் கிழடைவதில் மட்டும் வெற்றிகரமாக நடந்து கொண்டார்கள்.

அரசியல், விடுதலைப் போராட்டத்தில் பேச்சுரை என்பது தேவை என்பதனை நாம் ஏற்கிறோம். ஆனால் பேச்சுரையை எப்படி அமைத்துக்கொள்வது? கருத்துகளை எப்படி முன்வைப்பது? நம் அடிப்படைகளை அமைத்துக்கொள்வது என்பதில், தொலைநோக்கும் கொள்கைத் தெளிவும், பரந்த மனப்பான்மையும் தேவை. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மேற்கொண்ட பேச்சுரைகள் எப்படி அமைந்தன?

தமிழர் விடுதலைக் கூட்டணியை விடவும் வேறு பல இயக்கங்கள் உண்டு. ஈழத்திற்கான பொறுப்பில், இவர்களை விடவும், மற்றைய இயக்கங்கள் எந்தளவிலும் குறைந்தவை இல்லை; அதே வேளையில் மக்களின் நம்பிக்கைக்கும், போராட்ட முன்னெடுப்புக்குமான முனைப்புக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியைவிடவும், இவ்வியக்கங்கள் முழு அளவில் பங்கேற்றவை. ஆனால் ஒரு தீர்வு குறித்து ஏற்படுத்தப்பட்ட பேச்சுரையின் போது, இவ்வியக்கங்களின் கருத்து கவனத்தில் கொள்ளப்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் திட்டமிட்டே இவ்வியக்கங்களைப் புறக்கணித்தனர் என்றே நாம் கருதுகின்றோம்.

ஆனால் இவ்வியக்கங்களின் எண்ணங்களும் ஈழவர்களின் எண்ணங்களும் எதிரொலிக்காத எந்தத் தீர்வும் நிலையான தீர்வாக, சரியான தீர்வாக அமையாது என்றே கருதுகின்றோம்.

— ஆசிரியவுரை- 'ஈழம்' 15-12-83

குமுதத்தில் வீரமணி ....!

கேள்வி : ஐயா, 1-12-83 குமுதம் இதழில், தம் ஐரோப்பா செலவு பற்றிக் குறிப்பிடுகையில், பிரான்சில் நடந்த பெரியார் விழாவிற்குத் தம்மை அழைத்தது, உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் என்று கூறாமல், 'பாரிசில் உள்ள பகுத்தறிவு வாதிகளும் தமிழன்பர்களும்' என்று குறிப்பிடுகிறாரே! பார்த்தீர்களா? அவர் ஏன் உ.த.மு.க.வை மறைக்கிறார்?

— வெற்றிச்செல்வன், மதுரை-1

விடை : பார்த்தேன். திரு. வீரமணி அங்கெல்லாம் மிக நன்றாகத்தான் பழகினார். இங்கு வந்த பின்னர் தான் அவரிடத்தில் மாறுதலைப் பார்த்தேன்; பார்க்கிறேன். ஒருவேளை அவருக்கு நம் தேவை முடிந்து விட்டிருக்கலாம்; இன்னொன்று, தம்மை வளர்த்தவர்களையே அவர் மறந்தவராயிற்றே! அழைத்தவர்களை மறக்காமல் இருப்பாரா? ஆனால் அவர் மறந்தாலும் தாழ்வில்லை; மறைக்கப் பார்க்கிறார்! அவர் இப்படி இருப்பார் என்று நான் கனவிலும் கருதவில்லை. என்ன செய்வது? என்னுடைய ஐரோப்பா செலவுக் கட்டுரையில் சில விளக்கம் வரும். பொறுத்திருந்து படியுங்கள்! (சில நிலைகளை முழுமையாகச் சொல்ல நான் விரும்பவில்லை. இனநலம் ஒன்று குறுக்கே நிற்கிறதே!)

தமிழ்நாட்டில் உள்ள மதப்பிரிவினர் (1971-ஆம் ஆண்டுக் கணக்குப்படி.)

(1)	இந்துக்கள் :	3,66,74,150	89.02%
(2)	கிறித்துவர்கள் :	23,67,749	5.75%
(3)	இசுலாமியர்கள் :	21,03,899	5.11%
(4)	சைனர்கள் :	41,097	0.10%
(5)	சீக்கியர்கள் :	4,355	0.01%
(6)	பிறமதத்தினர் :	7,918	0.01%
	மொத்தம் :	4,11,99,168	100%

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்,
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/657

அனுப்புதல்: பெறுநர் நூல்-அஞ்சல்
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு, திரு/திருவாட்டி
திருவல்லிக்கேணி,
சென்னை—5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.